# வடகிழக்கு பருவமழை: தமிழ்நாடு முழுவதும் அமைச்சர்கள்–கழக முன்னணியினர் நிவாரணப் பணி!



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் வட்டம், ஆண்டார் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் கனமழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து உயிரிழந்தவர்களின் இல்லத்திற்கு நேற்று (22.10.2025) நேரில் சென்று அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.



தென்காசி மாவட்டம் மேலப்பாவூரில் பிரதான கால்வாயில் தடுப்பு சுவர் உடைந்து விளை நிலங்களுக்குள் தண்ணீர் பாய்ந்ததை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் காவேரி சீனித்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, பொன் செல்வன், ரமேஷ், பேரூராட்சி தலைவர் ராஜன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், கழகத்தினர் உள்ளனர்.



சென்னை மாநகராட்சி இராயபுரம் 60வது வார்டு பகுதியில் உள்ள அன்னை சத்யா நகரில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு, அப்பகுதி மக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அப்பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக அப்புறப்படுத்துமாறு, மாநகராட்சி அலுவலர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, கட்டா ரவி தேஜா, பி.ஸ்ரீராமுலு எம்.சி., விஜய்பாபு, பழனி, மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக திருவள்ளூர் நகராட்சி உட்பட்ட 14 வது வார்டில் மழை நீர் வெளியேற்ற பணிகளை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டார் உடன் நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், நிர்வாகிகள் மோ.ரமேஷ், வி.எஸ்.நேதாஜி, அருணா ஜெய் கிருஷ்ணன், ஜேசிபி.கேசவன், பா.டில்லிபாபு, விக்னேஷ்அண்ணாதுரை, பா.விக்ரம் உள்பட அரசு அதிகாரிகள் நிர்வாகிகள் உள்ளனர்



எழும்பூர் தொகுதி 99வது வார்டில் வடகிழக்கு பருவ மலையில் பாதிப்படைந்த திடீர் நகர், சாலை மாநகர், ஆர்.கே.புரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் பரிதிஇளம்சுருதி எம்.சி. முன்னிலையில் காலை, மதியம், இரவு, ஆகிய மூன்று வேலைகளிலும் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. உடன் மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் உள்னர்.



வடகிழக்கு பருவ மழையால் பாதிப்படைந்த ஈரோடு மாவட்டம் கொங்கார் பாளையம் ஊராட்சி தரைமட்ட பாலத்தினை வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதுபோது மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், கள்ளிப்பட்டி மணி, சிந்து ரவிச்சந்திரன், கோபி நகர் மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ், சிறுவலூர் எஸ்.எ.முருகன், பொ.ராமச்சந்திரன், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவது குறித்து அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கர் அடை மழையிலும் திடீர் ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மதுரை கோட்ட மேலாண்மை இயக்குனர் சரவணன், மதுரை மண்டல பொது மேலாளர் மணி மற்றும் போக்குவரத்து கழக அதிகாரிகள் உடன் இருந்தார்கள்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 யில் பருவ மழையினால் பாதிக்கப்பட்டு வெள்ள நீர் தேங்கிய பகுதிகளை மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி நேரில் சென்று சாலைகளில் தேங்கிய மழை நீரை அகற்றி தற்காலிக சாலைகள் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார் அப்பொழுது உதவி ஆணையர் உதவி பொறியாளர்கள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில் பருவ கால மழையின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கழக துணை அமைப்பு செயலாளர் திரு வி க நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி அரசு அதிகாரிகளுடன் சென்று மேற்கொள்ள வேண்டிய நிவாரண பணிகளை பார்வையிட்டார்.